
# தொலைந்த நாட்கள்



## கவிதைகள்

-திருமலை சுந்தா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்த நாட்கள்

– திருமலை சுந்தா –

அம்மா பதிப்பகம்

வெளியீடு – 18

31/1 சமாது ஒழுங்கை

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தொலைந்த நாட்கள் |
| ஆசிரியர் | : | திருமலை சுந்தா |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2014 - சித்திரை |
| இலக்கிய வகை | : | கவிதை |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பிரதிகள் | : | 500 |
| மொத்த பக்கங்கள் | : | 40 |
| அட்டைப்படம் | : | சிசு |
| கணனி வடிவமைப்பு | : | அஸ்ரா பிரிண்டர்ஸ் |
| அச்சிட்டோர் | : | அஸ்ரா பிரிண்டர்ஸ் |
| வெளியீட்டோர் | : | அம்மா பதிப்பகம் |
| | | 31/1, சமாது ஒழுங்கை, திருகோணமலை. |
| | | (0756901316) |
| நூலின் விலை | : | 150/= |
| I.S.B.N | : | 978-955-41129-0-2 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

## தொலைந்த நாட்கள்

சிறுகதை சொல்லியாக என்னை நான் ஆக்கிக் கொள்ள முன்பு அந்த பள்ளிப் பருவம் தான் என் நினைவுக்கு வருகின்றது. அறுபது கடைசிகளிலும் எழுவதாம் ஆண்டு காலகட்டத்திலே என்னோடு பழகிய பள்ளித் தோழர்கள் என்னை கவிஞராகவே இனங்கண்டனர். கவி அரும்புகள் அந்த செடியில் தளிர் விட்ட அந்த பொழுதுகளில் என்னுள் பூத்த பூக்கள் தான் எத்தனை?

பூத்துக் குலுங்கும் அந்த அழகு பூக்குவியலில் நான் ஆனந்தித்து ஊற்றை கழுவி குளிக்கின்ற போது ஏற்பட்ட ஆத்மத்தின் மெய்மை இன்றும் என்னுள் பரவித்தான் இருக்கின்றது.

இலக்கியம் வாழ்க்கையின் அப்பட்டமான பிரதிபலிப்பா? இலக்கியம் வேறு வாழ்க்கை வேறென்பது உண்மைதானா? இலக்கிய விமர்சனத்தின் போக்கும் இந்த வழியே தான் பயணிக்கின்றதா?

இப்படியான எண்ணங்களோடு கரைந்த காலங்கள் என்னின் தொலைந்த நாட்கள் தான்

" பொய்யை மெய் போலச் சொன்னால் அது மெய்யாகும் விந்தை"என்று எங்கோ படித்த வரிகள் கவிதைக்கு பொருத்தமானதா?

மெய்யை மெய்யாக சொன்னால் கவி வரிகள் உயிர் பெற்றெழும் என்பது உண்மையென நான் உணர்ந்ததால் தொலைந்த நாட்களை என்னால் ஒழித்து வைக்க முடியாமல் இருப்பது என் குற்றமல்லவே.

பயந்து பயந்து நெருப்பின் தீக் நாக்குக்குள் அகப்பட்டு ஜீரணமான தொலைந்து போன அந்த "சுதந்திரன்" பத்திரிகையில் வெளிவந்த கவிதைகளுக்காக ஏங்குகின்றேன்.

யாப்பை மீறுவதால் அதை கவிதை என்று எப்படி ஏற்க முடியும்? யாப்பை மீறிய கவிதையின் பிதாமகரான பாரதியினை கவிஞராக நாம் ஏற்றுக் தானே இருக்கின்றோம். இப்படியான கவிதை பற்றி போராட்டம் ஏற்பட்ட வேளை நான் கவிதைக்காரனாக வந்ததாக ஞாபகம்.

நான் மரபை முற்றிலும் வெறுத்து வந்தவனல்ல. ஓசை ஒழுங்கை விட மெய்மையில் சத்தியமான வலிமை வேணுமென நான் எண்ணியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொலைந்த நாட்கள்**

எனக்கு பெரியதொரு குற்றமாக தெரியவில்லை அவரவர் அவரவராகத் தான் எழுத வேண்டும் என்பது எனது நம்பிக்கை.

புதுக் கவிதைக்காரனாக கவிதைக் காற்றில் அவதிக்காரனாக இருந்திருக்கின்றேன்

தேசாபிமானி , குமரன், வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, அபியுக்தன், அக்னி, சுதந்திரன், சுடர் இப்படி என்னை வளர்த்தெடுத்தவை பல.

ஒரு கவிதையைப் படிக்கும் போது எழுதியவனின் வாழ்வையும் அந்த காலத்தையும் ஊன்றிப் பார்ப்பது இலக்கியத்திற்கு புறப்பான செய்கை என்பது எனக்குத் தெரியும் தேர்ந்த விமர்சகர்களும் இதிலிருந்து மீறி ஒரு சிருஷ்டியை எடை போட மாட்டார்கள் என்பது புதுமையல்ல. கசப்பாக இருந்தாலும் வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அதன் படிப்பிலிருந்து என்னால் விடுபடவோ தப்பிக்கவோ முடியவில்லை.

என்னை மீறி விழுந்த கவியறைகளை கன்னத்தில் நான் தாங்கி, இதயத்தில் பூட்டி வைக்க முடியாது ஏற்பட்ட தவிப்பே இந்த தொலைந்த நாட்கள்

தரமிக்க எழுத்தைப் படைக்கத் தூண்டிட உற்றறியும் ஆற்றலின் கூர்மையும், நுண்ணுணர்வும் போதுமென நான் நம்புபவன்

'தொலைந்த நாட்கள்' கவிதைத் தொகுதி அம்மா பதிப்பகத்தின் 18வது வெளியீடு. நினைவுகள் கனவுகள் அல்ல மறந்து போக. பிரசுர தேவை கருதி இக் கவிதைகள் எழுதப்பட்டவைகள் அல்ல. இன்று எப்படியோ நூலாகி விட்டது. இதற்கு நான் முழுக்காரணம் அல்ல.

தொலைந்த நாட்கள்.........உங்களுக்கு எப்படியோ? விமர்சியுங்கள்.

அச்சு சுகந்தந்து ஆனந்திக்க உதவிய 'அஸ்ரா பிரிண்டர்ஸ்', முகந்தெரியாத ஓவிய பெருமக்கள், என்றும் என் நினைவுக்கு உரியவர்கள்.

தொலைந்த நாட்கள் எனது மருமகன் கிருபாகரன் அவர்களுக்கு சமர்ப்பணம்.

படியுங்கள். என்னோடு பேசுங்கள்
உங்கள் எண்ணங்களுக்காக நான்
காத்திருக்கின்றேன் தொடருவேன்...............

நன்றி

- திருமலை சுந்தா -

31/1 சமாது ஒழுங்கை
திருகோணமலை
25.02.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுதிகொண்ட மனத்தினாய்

வதைக்களம்
என்னும்
சிறையினுள் புகுந்து
வெளிவரத்துடிக்கும்
தோழா!
வெளியிலும் நாங்கள்
சிறைபடும் வாழ்வை
நொறுக்கிடும் மனத்துடன் வா!

26.09.1986

## சிறைப்பார்வை

மாரியுடன் கோடை
வசந்தம் என்னும்
காலங்கள் அறியா
கற்குகை வாழ்வில்
சுதந்திரமாய் தவழ்ந்துவரும்
வண்ண நிலவே
நாங்கள் நெடுங்காலம் கண்டு
இருட்டில் பூத்த
கடற்கரை மலராய்
உப்புக்காற்றில்
ஓரங்கள் கருகிட
உணர்வுகள் ஒளிதேடும்
உடலிங்கு வாடும்
நாங்கள் உண்மையில்
சுதந்திரப் பறவைகள்.
26.09.1986





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அவதாரங்கள்

துரியோதனனின்
துகிலுரிந்த அரசவைபோல்
மானுடம் மௌனித்த
சிறைவாழ்வில் கசங்கி
குருதிகள் நனையும்
மண்ணில் மிதித்து
நாளைய விடியலின்
வாயிலை நோக்கி
சென்றிடும் தூரப்பயணத்தில்
மனித விழுமியம் காத்திட
நாங்களும்
அவதாரம் எடுக்கின்றோம்.
நாங்கள்
மௌனித்த பிறகு
நீங்கள் விழித்திருப்பீர்கள்.
அதன்பின்......
முல்லைவாய் அவிழ்ந்துவந்து
முத்தமிட்ட தென்றலும்
கடலைக்கிழித்து வந்து
கை குலுக்கும் செங்கதிரும்
வெறுமையின்பின் தோன்றும்
வசந்தத்தின் அறிகுறியே

09.10.1986






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பூகம்பத்தின்...

இது எங்கள் சோலை
அதை குத்தகைக்கு
எடுத்துவிட்டார்கள்.
வேட்டைக்காரர்கள்.
அவர்களின்
துப்பாக்கி சுதந்திரத்தாலும்
சப்பாத்து மகிமையாலும்
இங்கே பறவைகள்
இருதைகளாகின...
சில சிதைக்கப்பட்டன.
இன்னும் சில
சிறைவைக்கப்பட்டன.
கூடுகள் குலைக்கப்பட்டு
குஞ்சுகள் மிதிக்கப்பட்டன.
கோட்டான்களின்
குடியாட்சியில்
சோலையின்று
ஒரு பூகம்பத்தின் ..........
ஒரு புயலின் ..............
நிலைக்களமாகியது
இளைய பூக்களிலெல்லாம்
தேனைப்பறிப்பது
கருங்குளவிகள்தான்
இப்போது அந்த மலர்கள்
கற்புத்திரை கழன்றதனால்
கண்ணில் புஸ்பமாகிவிட்டன.
பூங்காவில் வரும்
தென்றலுக்கும்
இன்று
புதுப்புதுப் பெயர்கள்.
9.10.1986





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடுகள்

மானுடம் மௌனித்த
உறவுகள் ஊடே
விழுமியம் பெற்ற
கனவுகளைக் சுமந்து
ஒளியினை நோக்கியே
உன் சுவடுகள் நிலைக்க
உடல் சிதைந்ததென்ன
நியாயம்?
மனங்களில்
நிறைந்து நிற்கின்றாய்
உறவுகள் ஓய்ந்துவிடவில்லை
அது
ஓங்கி வளர்கின்றது.

27.11.1986



உணர்வு

நீ
வீழ்த்தப்பட்டதாக
அவர்கள் நினைக்கிறார்கள்
ஆனால் உன்
ஒவ்வொரு உணர்வுகளோடும்
நாங்கள் எழுந்துவருவதை
அவர்கள் அறியவில்லை
இனியவனே தோழா
நீ மறைந்து போகவில்லை
எங்கள் நெஞ்சங்களினால்
நிறைந்து நிற்கின்றாய்
02.12.1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



<u>மரணத்தை வென்றவர்கள்</u>

உன் சாம்பல் மேட்டில் தான்
எங்கள் சரித்திரமே
உயிர்பெறுகிறது.
காற்றிலே கலந்த
அஸ்தியை நாங்கள்
சுவாசிக்கும் போது
நீ எங்களுடன்
வாழ்ந்து கொண்டே
இருக்கின்றாய்
உன்னை எங்களிடமிருந்து
பிரிக்கமுடியாது
அவர்கள்
அப்படித்தான் நினைத்தார்கள்
நாம்
மரணத்தை வென்றவர்கள்
என்பதை
இப்போது புரிந்திருப்பார்கள்
உன் ஒவ்வொரு
உணர்வுகளையும்
நாம் பிரதிபலிக்கின்றோம்.
என்ற
எம் செயலின்மூலம்
27.11.1986

<u>இலட்சியம்</u>

இறப்பு என்பது
நிச்சயிக்கப்பட்டதொன்று
விடுதலை வரலாற்றில்
இது
கறைபடிந்த அத்தியாயம்.
ஒவ்வொரு போராளிக்கும்
இலட்சியங்கள்
நிராசையாகிறது.
13.12.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லறை**

நீ
நினைத்திருக்க மாட்டாய்
உன் வீரத்தை
இவர்கள்
விபச்சாரம் செய்வார்களென்று
கல்லறைகளை
எண்ணி எண்ணியே
உன் கனவுகளை
சிதைத்துவிட்ட இவர்கள்
மார்பு தட்டுகிறார்கள்
இன்றும் நாளையும்
இவர்கள் இப்படித்தான்

07.12.1986



**கருவறை**

மனிதம்
மறைவிடம் தேடியபோது
மௌனித்த உறவுகளால்
வஞ்சிக்கப்பட்டு
புறப்பட்ட புனிதர்களின்
சுவடுகளைத் தேடியவன்
இழப்புகளை
எண்ணி எண்ணியே
சிந்தனையினை
கர்விணையாக்கி
வெறும்
கல்லறைகளை
கருவறையாகக் கண்டவன்
நெருப்புச் சோலைக்குள்ளே
சிறகின்
மகத்துவம்சொல்லி
பறவைகளை
விழித்தெழச் செய்தவன்
வீழ்த்தப்பட்ட ஒவ்வொன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைக்கப்பட்ட
தத்துவத்தில்
மனித விழுமியம்
காத்திடத் துணிந்தவன்
தொடரும் பயணத்தில்
தன் விழிகளை நோக்கியே
விரலைப்புதைத்துவிட்டு
ஓவியம் வாங்கி
மகிழ நினைக்கின்றான்
14.12.1986

**ஆமை**

நீயொருவன்
மடியில்
தவழ்ந்தபோது
தாய்மைச்சிகரத்திலே
உன் அன்னை
இன்பசாகரத்தில்
சங்கமித்தாள்
அவளின் விழுமியங்கள்
வீரியம் பெற்றது
நானே...
உன்னைப்போல்
ஆயிரம் புதல்வர்களை
மடியில் கிடத்திவிட்டு
வேதனை அகழியில்
விழுமியம் இழந்து
நிற்கின்றேன்.
இமைகளே
எமனாகும் போது
விழிக்கும் விடுதலை
தவிர்க்கமுடியாது.

முகத்தில் விகாரங்களும்
மலடாகும் தாய்மைகளும்
நீதியை
பிரசவம் செய்யும்
என்னில் நிகழும்
மனிதப்பாதங்களால்
நான்
விகாரமாகிக்கொண்டே போக,
மனிதம் மறந்தவர்கள்
குருதியை
கொப்பளித்துக்கொப்பளித்து
என்
தாய்மையைப்பழித்ததால்
தாய்மையை
உணர்ந்துநான்
தாயகமாகின்றேன்
20.11.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறுவடை**

இழப்பின்
மத்தியில் தான்
ஈழப்போராட்டம்
முன்னேறுகிறது
உன்
அடிச்சுவட்டைத்தான்
அரிச்சுவடியாக்குகிறோம்
ஒவ்வொருவரின்
விதைப்பிற்குப்பின்னும்
அறுவடைக்கு
நாள் பார்க்கின்றோம்.

02.01.1987

**புனிதத்தின் வாரிசுகள்**


கண்ணீர்க்குப்பைக்குள்
முகத்தைத் தொலைத்தவர்கள்
சுதந்திர தேசத்தை
தொலைதூரத்தில்
தேடிக்கொண்டிருக்கின்றார்கள்
முகம் இழந்தவர்களின்
அகிம்சை ஆரவாரத்தால்
மனிதம்
மாணத்தை இழந்தது
நிர்வான நாகரீகத்துக்கு
நிர்மாணம் கட்டும்
புனிதத்தின் வாரிசுகள்
பூமிகாதானம் செய்யும்
இவர்களின்
குருதியில் குளித்தபின்பு
மகாத்மாவின் முதுகில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவிடம் தேடுகின்றார்கள்
விழிக்கின்ற கதிரின்
உறைப்புக்கு ஏங்கிய
தாமரைக் கட்டங்களாய்
அழைப்பு மடல்களை
அஞ்சல் செய்துவிட்ட இவர்கள்
ஒளிவரும் முன்னே
விழிகளை இழந்து
ஓவியம் வாங்க
தேடுகின்றார்கள்
சுதந்திரம் எங்கோ
கடையில் விற்கிறதாம்.
10.01.1987





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**கருகிய சடலம்**

உரத்த இரவுகளில்
மறுத்த உறக்கம்
கனவுகளைக் கைதுசெய்து
விழிகளை
சென்றிக்கு வைத்திருக்கிறது.
மனித மணந்தேடும்
துப்பாக்கி ஓநாய்களின்
மோப்ப இலக்குகள்
குழந்தைகள் ......
பெரியவர் .....
குமரிகள் ....
இளைஞர்கள் ....
குற்றுயிர்க் குருதிபாயும்
கருகிய சடலங்கள்.
காணாமல் போனவர்களில்
பட்டியல் நீளமாகும்
எங்கோ
வானத்தை வெறித்த
விழிகளுடன்
சில பிணங்கள்
காகங்கள்
அடையாளம் காட்டும்
காட்சியின் புலப்பாடுகள்
அந்த வேட்டைக்கு
சாதகமாககும் இரவுகள்
எங்களுக்கு
எதிரியானபோது
அவற்றை நாங்கள்
ஐக்கியப்படுத்திக்கொண்டோம்.
16.01.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாய முத்திரை

அன்னியச்சுவடுகள்
பதித்த
துப்பாக்கி நகங்கள்
உன் மேனியில்
படுகளப் பாலைவனங்களை
மட்டுமல்ல
முகலாவண்யங்களையும்
சிதைத்து
குருதித் தொட்டியில்
நீச்சல் பழக்கியது
உன் அடிமைவாழ்விற்கு
தேச ஒற்றுமை வாசகம்
பொறிக்கப்பட்டதால்
இங்கு
உன்மேனியின்
ஒவ்வொரு நிகழ்விற்கும்
நியாய முத்திரை
பொறிக்கப்படுகிறது.
அகிம்சை நாமத்தால்
இரத்த தானமும்
மனிதப்பிணங்களும்
உன்னிடத்தில்
மலிவாகக்கிடைக்கிறது
உன் தனித்துவத்தை
சிறைப்படுத்தும்
தேசியத்தின் விலங்கினை
தகர்ப்பதற்கு
ஒரு கட்டம்
இழப்புக்கள் மத்தியிலும்
இலக்கினை நோக்கியே
முன்னேறுகின்றது.
21.01.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர் மானம்

வரலாற்றுப்பேரிகையில்
மார்பு தட்டும் தமிழா
நாளை உன் வரலாற்றை
யார்
மார்புதட்டிச் சொல்வார்கள்?
கலிங்கம் முதல்
கடாரம்வரை
இமயத்திலும் ஏற்றம் பெற்ற
முன்னோரின் முதுகினிலே
வீரத்தை விற்கும்
நீ
கற்பனைக் கரிசலிலே
கட்டிய மாளிகைகள்
சுயநல ஆசைக்கு
தமிழர் மானத்தை
ஏலம் போடும்
சந்தை என்பது
இப்போதுதான் தெரிகிறது.
விமானத்தில் ஏறும்போதே
தமிழர் விசா இல்லாமலே
மானத்தையும்
ஏற்றிச்சென்றீரோ?
ஈழத்துப்பரணி பாடும்
எழுதுகோல்
கீதமெல்லாம்
ஆடையில்லாமல் நடத்திய
ஆர்ப்பாட்ட நாடகத்தினால்
அரை நிர்வாணமாகியதே
ஈழத்தின் இறைமை மீட்க
இறப்பிலும் மானம் காக்கும்
ஒரு கட்டம் இங்கு போராட
நீங்கள்
'உறீத்ரோ' தளத்தில் நின்று
வீரத்தை அல்லவோ
விபச்சாரம் பண்பாட்டுப்
பெருமையில் செய்கின்றீர்கள்
ஊறிய நீங்கள்
மேல்நாட்டில்
இப்படித்தான்
வரலாற்றைப்படைக்கின்றீரோ?
உங்கள் வரலாற்றை
யார் மார்புதட்டி
சொல்லப்போகின்றார்கள்?

27.02.1987




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண் துகள்**

இங்கு வாழ்விடங்கள்
மயானமாகியது
கோட்டான்களின்
வீட்டு வாசல்கள் தோறும்
எலும்புக்கூடுகளின்
தோரணங்கள்
கபாலங்களின்
பேரிரைச்சல்
ஊரினை உமிழ்ந்து வரும்
ஊழித்தீயின் பயங்கரம்
வானத்தே பறந்து வரும்
அக்கினிப்பறவையின்
அசுரவேகம்
டாங்கிகள்
பவ்லோக்கள்
இன்னும் காக்கிகள்
எங்கும்
பீரங்கியின் பிதற்றல்
அந்நிய வருகைக்கு
என் தேசத்தில்
கூறப்படும் கட்டியங்கள்
தீயின் சுவாலையில்
கருகிய சோலையில்
புது வசந்தத்தை நோக்கிய
புஸ்பங்கள் பல
சாம்பல் மேடுகளில்
சரித்திரத்தை
புரட்டிப்படிக்கும்
நல்லதொரு உலகம்காண
அவை
தீயைப்போலவே
சினத்துடனும்
சிகப்புடனும்
தலைநிமிரும்
தலைநிமிரும்
என் கனவுகளும்
கருத்துக்களும்
அன்று உயிர் பெறும்
நான் வாழ்வேன்
என் இனிய தேசத்தில்
ஒவ்வொரு
மண் துகள்களிலும்
நான் வாழ்வேன்.
15.04.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பரணிப்பல்லவிகள்**

மனிதத்தை
ஒரு கட்டம்
தேடிக்கொண்டிருக்க
சட்டங்கள்
நியாயப்படுத்துகிறது.
வீதிகளில் சில
இன்றும்
தஞ்சமடைந்த
கோவில்களில் சில
பிணங்கள் எங்கும்
விதைக்கப்பட்டிருக்கும்
இடிந்த இல்லங்களுக்குள்
எட்டிப்பார்க்கும்
கை, அல்லது கால்
மரணத்தினை நினைவூட்டும்
ஓலங்கள்
பரணிப்பல்லவிகள்
உலகை வெறுத்த
வார்த்தைகள்
ஒரு நொடியில்
தாயகத்தின் இழிநிலை
தலைக்குமேலே 'பொம்பர்'
பரல் உருட்டும்'அவ்ரோ'
ஊழிக்காலத்தின்
ஒரு வசிப்பிடம்
தர்மிஸ்டர் மொழியில்
தஞ்சக்குறியிடங்கள்
பலிக்களமாகியது.
25.05.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீடுதலை

மரணித்த தோழனே!
உன் வீரத்தை
இவர்கள்
வீதியில் நிறுத்தி வைத்து
விபச்சாரம் செய்கின்றார்கள்
நீ
விடுதலையைத்
தேடிச்சென்றாய்
இவர்களோ
உன் இழப்பில்
விளம்பரத்தை தேடுகின்றார்கள்
மண்ணுக்கு
உரமாகவேண்டிய
உன் சாம்பரை
மாடிக்கடைகளில்
மலிவாக
விற்பனை செய்கின்றார்கள்
ஏழ்மையின் விடியலை
எவனுக்கோ
காவிச் செல்லும்
உன் தோழர்கள்
துப்பாக்கியை
சுய தேவைக்காகவே
பயன்படுத்துகின்றார்கள்
12.06.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொலைந்த நாட்கள்**

தினம் தினம்
இருட்டைத்தரிசித்தவர்கள்
உதயம்
நீண்டு செல்வதாக
சலித்துக்கொள்கிறார்கள்
ஒளியினைப் பாய்ச்சிக்கொள்ள
கண்களை
கூர்மையாக்கிக் கொண்டவர்கள்
மின்மினிப் பூச்சியை
சூரியனாகப் பூஜிக்கின்றார்கள்
இவர்கள் இப்படித்தான்
தங்குமிடங்களில்
தொங்கிப் பிழைத்தவர்கள்
துரோகத்தின் கரங்களை
துணையாக நினைக்கின்றார்கள்
வசந்தமே வரவேண்டாம்
என்று
வாக்களிக்கின்றார்கள்.
தொலைந்த நாட்களை
தூசிக்கத்தொடங்கிய
இவர்கள்
மரணித்த மலர்களை
மறந்துவிட்டார்கள்
எங்கள் மண்ணையும்
அந்த நாட்களையும்
எப்படி
மறந்து போனார்கள்
துரோகத்தின் அரவணைப்பில்
துழங்கிப்போனவர்கள்
சுதந்திரத்தை
இப்படித்தான்
பாவித்துப்பழக்கப்பட்டார்கள்
செருப்பால் அடிபட்டும்
குஞ்சமும், குடையும்
சுகமென நினைக்கும்
தன்மானத் தமிழினம்
வேறு யாரும்இல்லை........

07.08.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை சுந்தா

**ஒரு முற்றுப்புள்ளி**


இந்த மலைநாட்டின்
வனப்பிற்கும்
இலங்கையின் மானத்துக்கும்
பச்சைக்கம்பள
ஆடை கட்டினோம்
உழைப்பினால் மட்டுமல்ல
உதிரத்தையும் பாய்ச்சினோம்
வியர்வைத் துவாரங்கள்
வற்றி வரண்டு போக
இம் மண்ணிற்காய்
உடலையும் உரமாக்கினோம்
தேயிலையைப் போல்
சிலரின் செழிப்புக்கு
ஒரு பரம்பரை
இப்படியே
உக்கிப்போகிறது
காலமாற்றங்களை
அரவணைக்கும்
எங்கள் பார்வையில்
மேகங்கள்
வெண்மையாகவும்
பின் சிவப்பாகவும்
பரிணமிக்கின்றன.
தென்றல் புயலாகும்
விலங்குகள் நொறுங்கும்
மாடமாளிகைகள்
சரியும்
வியர்வையின் ஊற்றிடம்
வீரியம் பெறும்
மலை முகடுகளும் சிதறும்
பூகம்பத்தைப்போல்
ஒரு புரட்சி வெடிக்கும்
அடிமை வாழ்வின்
அவலத்திற்கு
ஒரு முற்றுப்புள்ளி
முழுமையாக்கப்பட்டிருக்கும்.
25.10.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்னுமா புரியவில்லை?**

நாங்கள்
சமுதாயச்சட்டத்தின்
நாகரீக நீதிமன்றத்தினால்
சிறை வைக்கப்பட்டவர்கள்
ஆண் உடைமைச் சமுதாய
அலங்கார வார்த்தைகளினால்
அடிமை விலங்கை
அணிகலனாய் பூண்டவர்கள்
தோலுரித்து சுவைபார்க்கும்
சோதனைக்களத்திற்கு
அறுவடைக்காய் அனுப்பப்பட்ட
உற்பத்தியின் சாதனம் நாம்
பண்பாடு என்று
படுகளத்தை அலங்கரிக்க
கோலமாய் தூவப்பட்ட
கட்டத்தின் வாரிசு நாம்
திலகத்தை அழித்துவிட்டால்
உலகினை இருண்டதென்று
வெள்ளைசோலைக்குள்
வாழ்வமைத்த
நடைப்பிணத்தின் அவலங்கள்
நாம்
இன்னுமா புரியவில்லை?
நாங்கள்தான்
அன்னையாய் வடிவமைத்த
மனித உற்பத்தியின்
இயந்திரங்கள்
அடுப்படி உலைக்களத்தில்
ஆயுளைக்கடத்தி வேகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைமேகம் மறைத்திருக்கும்
மரபுக்கவிதைகள் நாம்.
படிதாண்ட முடியாத
பத்தினியாய் புகழெடுத்து
அடிவாங்கி நீர்சிந்தும்
சபையேறுக்கவிஞர்கள் நாம்
விதவையாய் ஆனபின்பும்
விளக்கிருந்தும் நெய்யில்லா
உணர்ச்சிக்குத் தடைபோட்டு
சாக்கடையில் பூத்தவர் நாம்
வேலியைத் தாண்டாமல்
வீட்டுக்குள் விளக்கேற்றி
யன்னல் கம்பிக்கு
வாழ்வமைத்து
நரகையும் சொர்க்கமாய்
காண்பவர் நாம்
இன்னுமா புரியவில்லை?
நாங்கள்தான்
தாயினமாய் காட்சிதரும்
பண்பாட்டின் சித்திரங்கள்
நாலு பேர் முன்னாலே
தலைநிமிர்ந்து நின்றாலோ
நாணமற்ற வேசி என்றும்
வம்பாடிக் கூட்டமென்றும்
பண்பாட்டைச் சொல்லிச்
சொல்லி
பழிவாங்கப்பட்டவர் நாம்
மரபுக்கவிதையாக
யாப்புக்குள் சிறைப்பட்டு
இலக்கணத்தை மீறி
புது இலக்கியத்தைக் காட்ட
முடியாமல் தவிக்கும்
புதுக்கவிதையாய் போனவர்கள்
நாம்
எங்களை இன்னுமா
புரியவில்லை?
எங்கள் அவலங்கள்
இன்னுமா தெரியவில்லை
நாங்கள் தான்
அன்னையாய் வடிவமைத்த
மனித உற்பத்தியின்
சாதனங்கள்.

02.09.1986


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இயங்கியல் நியதி

நாங்கள்
தலையணையில்
முகம் புதைத்துக் கிடந்தது
என்னவோ உண்மைதான்
அது பஞ்சணையில் அல்ல
முட்புதர்களில்
கரிசல் காட்டில்
கல்,மண் தரைகளில்
நீங்களோ
எலும்பைக் காவிச்சென்று
இமயத்தில்
இலட்சணை பொறித்தீர்கள்
நாங்கள்
கனவுலகில் கரகோசித்து
நிதர்சனத்தை
நெடு நாளாய்க் காண
மறந்து விட்டோம்
வாஸ்தவம் தான்
ஆனாலும்
நாங்கள் அந்நியப்படவில்லை
இந்த மண்ணின் நிகழ்விற்கு
பங்காளியானோம்
காற்றுக்குத்தடையும்
கதிருக்கு நிரந்தரமானதல்ல
சுதந்திரம்
என்பது பிறப்புரிமை
வீரமும், விவேகமும்
வாழையடி வாழையுமல்ல
நட்சத்திரங்களும்
ஒரு நாள்
ஒளியிழந்து போகும்

இந்த செம்மண்ணும்
நாளை கந்தகப்பூமியாகலாம்.

சோளகமும், வாடையும்
காலத்துக்குத்தான் மாற்றம்
மாறிச்செல்வதே
இயங்கியல் நியதி
தலையனை முகங்களும்
கனவின் தோற்றமும்
இப்படித்தான்
ஒருநாள் மறைந்து போகும்.

20.10.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>உபதேசம்</u>

நீங்கள்
காகமாய் கரைந்ததற்கு
காற்றின் காதை அல்லவோ
பொத்தியிருக்கவேண்டும்
எங்களுக்கேன் வாய்ப்பூட்டு?
இது
இரண்டாவது சுயம்வரமா?
நீங்கள்
காவிச்சென்ற எலும்புகள்
எழுச்சிகளாகவும்
காகத்தின் கீதம்
புரட்சியாகவும்
அங்கீகரிக்கப்பட்டபின்
மௌனிக்க
நிர்ப்பந்திக்கப்பட்டோம்.
மீட்பார்கள் வந்த பின்பும்
மனித நேயம்
மறைவிடம் தேடியது
எங்கோ
பாண்டவர் சைனியங்கள்
புறப்பட்டு விட்டார்களாமே!?
நாங்கள் இப்போ
பிரணவத்தைக் கேட்கும்
சுவாமி மலைப்பிரஜைகள்
எங்களுக்குத்தான்
உபதேசம்
காகங்கள்
கரைந்துகொண்டேயிருக்கின்றன.

28.10.1986






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**<u>அவர்களின் வரவு</u>**

புயற்காற்றில்
காவென ஆர்ப்பரிக்கும்
கற்பகச் சோலையில்
சிக்கிய பறவையாய்
ஈழத்தில்
தொடரும் அவலங்கள்
மன்னார் கரைச்சையில்...
வன்னிக் காட்டில்....
செம்மண் தரையில்...
குருதி தேங்கிய
மூதூர் வயல் வெளிகளில்.....
கோணலிங்க மண்ணிலினும்
தேனிசைக்கும்
மீன் நகரெங்கும்....
வெண் மணல் பரப்பிலும்....
தேயிலைபுதர்களிலும்.....
தொடரும் நிகழ்வுகள்....
வானை வெறித்த
ஆயிரமாயிரம் விழிகளுடன்
நேற்றைய பொழுதில்
கூடித்திரிந்த
என் உடன்பிறப்புக்கள்
நெஞ்சத்தை சூடாக்கும்
பதிவுகளில்
புதுத் தளிர்கள்
இன்றும் நாளையும்
எதிர்பார்ப்புக்களுடன்
கனவுகளை சிருஸ்டிக்கும்
சிற்பக்கூடங்களில்
புரட்டிப் பன்செய்து



அதேபூமியில்
மீண்டும் வானைநோக்கும்
ஆயிரமாயிரம் விழிகள்
அவர்களின் வரவை
எதிர்பார்த்து நிற்கும்
அக்கினிப் பூக்களாய்
25.09.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவசந்தம்

மானுடம் அன்றொருநாள்
விழித்தெழுந்தது.
யுகத்தின் எழுச்சிக்கு
துயிலெழுப்பிய
பூபாளத்தின் அதிர்வுகள்
விண்ணை முட்டியது.
சில்லென்ற உணர்வுகள்
இதுவரை
பூமியை அபிசேகித்த
குருதி
வானில் வரவேற்பு
கீதம் பாடின
புது வசந்தக் கொடிகள்
கரமசைத்து
காற்றில் மிதந்தது
மானுட விடுதலைக்கு
வழி திறந்தது.
தனியுடைமைச் சொர்க்கம்
தகர்ந்தது
எங்கும் புரட்சியின்
வெற்றிகள்
புது வசந்தத்தின் பூப்பிற்கு
முன்னுரை எழுதிற்று
நேயத்தை நேசித்த
மானிடச்சோலையெங்கும்
சிரித்தன மனிதமலர்கள்
வியர்வையின் ஊற்றிடங்கள்
விழுமியம் பெற்றது.
புரட்சியைக் காவிய
புயலின் வேகம்



திசையினைக்கடந்து
செல்லச்செல்ல...
மாளிகை மேடுகள்
சிதைந்து போயின
உழைப்பவர் குடிசைகள்
உயர்ந்து தோன்றின
31.10.1986




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதைப்பு

மின்சாரத்தின் அதிர்வுகள்
உன்னை இழந்த செய்தி
செவிப்பறையைத்
தீண்டியபோது...
ஆழ்கடலும்
அன்று அமைதிகொண்டது.
வேதனையைச் சுமந்து சென்ற
காற்று
செயலிழந்து ஒதுங்கியது
மௌனம் அஞ்சலியாக
கண்களில்
வரட்சி கவ்வியது.
இப்படியே
உன்னைப்போல் பலரையும்
நாங்கள்
இழக்கும்போது
ஐக்கியப்படுகின்றோம்.
உணர்வுகளால்
உன்னை
வீழ்த்தி விட்டதாக
அவர்கள் நினைக்கலாம்
ஆனால் நீ
விதையாக மாறியதை
அவர்கள்
அறிந்திருக்க நியாயமில்லையே

27.11.1986





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புற்கள்

காக்கி அரக்கரின்
சப்பாத்துக்கள்
மேய்ந்த சோலையில்
சாம்பல் காற்றை
சுவாசிக்கையில்
நாசி கரகரத்தது.
வாழைகள் இடறின
குரும்பைகளை
கண்ணீர் குப்பையாக்கிய
தென்னைகள்
கருகிய கரங்களுடன்
நிமிர்ந்து நின்றது
எங்கும்
புகைக்கூட்டம்
பறவைகள்
சம்பாதிப்பது கூட
பயங்கரத்தைப் பிரசவிக்கும்
நிசப்தம்
வெறிச்சோடிய வீதியெங்கும்
வெறுத்தோடிய வீதியெங்கும்
வெறுத்தோடியது மனித
வாடை
மயான அமைதி
மனிதத்துவத்தின்
சிறப்புக்கள் இங்கே
பிரதிபலிகின்றன.
முள்ளந்தண்டு முறிந்த
பாடசாலையின்
தலையைக் காணவில்லை
மண்டையோடு சிதறி
அறிவுச்சுரங்கம்
அக்கினியின் நாக்கினால்
குமியப்பட்டிருந்தது.
அவலடங்களுடே
பிறந்த மண்ணை
மறக்கமுடியாமல்
உறவுகள் இறுகியபடியால்
கசிந்த கண்களில்
காட்சிகள் பதிய
விரைந்து சென்றது கால்கள்
மறுவிநாடி
எங்கிருந்தோ சீறிவரும்
துப்பாக்கிக்குண்டினால்
நான் வீழ்த்தப்படலாம்
ஆனால்
நேற்று
சப்பாத்து மிதிபாட்டால்
கசங்கிய புற்கள்
இன்று
நிமிர்வதைக்கண்டு
முன்னேறுகின்றேன்.
15.12.1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**புறப்பட்ட புயலே**

சிவனு லட்சுமனா
இந்த மண்
எப்படி
அந்நியப்பட்டுப்போகும்?
கடலில் மட்டுமா இரத்தம்?
இந்த மண்ணுடனும்
கலந்தது நம் சொந்தம்
உடலை உரமாக்கியிங்கு
செல்வத்தை மட்டுமா
சேர்த்தோம்?
அந்த மலைகளும்
இந்தத் தேயிலைச் செடிகளும்
நாம் எப்படிப் பிரியலாம்?
அந்நியச் சுவடுகள் பதியப்படும்
ஒவ்வொரு துளி மண்ணும்
நம் உழைப்பின் முதுசம்.
உழைப்பைச் சுரண்டியோர்
உடமையையும் பறிக்கும்போது
கேள்விக்குறிகளும்
ஆச்சரியமாக நிமிரும்
இது சத்தியம்
டெல்டா தோட்டத்தில்
சினந்த தேயிலைச் செடிகள்
செந்நீரில் நனைந்தெழும்ப...
மலையில் மோதிய
மேகங்கள் மருண்டோட
பூகம்பத்தினூடே
புறப்பட்ட புயலே
சிவனு லட்சுமணா
துப்பாக்கி வேட்டுக்கள்
உன் நெஞ்சத்தை
துளைத்தது உண்மைதான்

சிவந்த உன் கண்கள் செருக
மண்ணை
அணைத்துக்கொண்டாய்
மலையகம் கொதித்தது.
உன் நாமம் மலைமுகடெங்கும்.
பொறிக்கப்பட்டது.
அந்நிய ஆக்கிரமிப்பு
வேட்டுக்கு
உடலை இழந்த இளையவனே
உன் உடல்கள் உரமான
இந்த மண்ணே
எங்கள் உடைமையென
எங்கும் எதிரொலிக்கும்
01.07.87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வான மலர்களே
நிதமும் பூக்கிறது.

அந்தக்காலங்கள்
மறுக்கப்பட்டது
கொடுமை
என் தாய்நாட்டின் அவலம்
இப்படிப்பொறிக்கப்படும் என்று
நான் நினைக்கவில்லை.
அந்நியரின்
ஒவ்வொரு நகர்வும்
எமது எதிர்காலம் நோக்கிய
நம்பிக்கையீனத்தை
தோற்றுவித்துக் கொண்டே
போகிறது.
ஆனாலும்
வரலாறு தோற்றதில்லை.

நடு இரவில்
கோட்டையிலிருந்து
குறிபார்க்கும்
சிங்கள வீரனே
போர் வரம்பை மீறிய
உன், செல், வீச்சு
உன்னையும், எஜமானையும்
சந்தோஷிக்க வைக்கலாம்.
இங்கு
அதன் எதிரொலி
சிதறிய சதைக்குவியல்.........
குருதி தோய்ந்த பாய்........
பிணங்களின் மத்தியில்தான்
எழுந்து வருகின்றோம்.

**போர்புதையல்**

உலகம்
மிகவும் பயங்கரமானது
மனிதர்கள்
மிகமிக கொடியவர்கள்
இவர்களிடம்
மனித நேயம்
உதட்டளவிலும்
அதிகாரம்
செயலளவிலும் நர்த்தனமாடும்
அண்டவெளியும்
போர்ப்புதையலுக்கு
தேடுதல் வைக்கும்
மமதையின் நிர்மானம்
பூமியில்
பொதுமை மலர்களை
பூக்கச்செய்ய
இவை
புயலாகவே இருக்கும்
புயலை எதிர்த்து
சிந்தனை
மனிதனின் தேகத்தில்
படரவேண்டும்.

பேரின அரசுக்கு
சேவகம் செய்யும்
தமிழர்கள்
ரோச நரம்பை
தொலைத்து விட்டு
தன் மானத்தையும்
வனவாசம் அனுப்பியதால்
விடுதலைச் சோலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிக்காக அல்ல
உரிமைக்காக.

அண்டவெளியில்
எங்கும் பேரிரைச்சல்.
அவ்ரோ வரும்
கூடு சிலைக்கப்பட்ட
அச்சங்கவ்விய விழிகள்
வானத்தை நோக்கியே நகரும்.
அன்றைய பொழுது.
இப்படியாய் கழிய
சா மேளமும், பீ பீயும்
சாமத்தியக் குரலையும்
வழமைக்குத் திரும்பும்.
வாழ்க்கையின் கட்டுமானம்.

கவர்களில்
சித்திரமாய் நிற்கும்
என் தேசத்திற்காய்
மரணித்த தோழனே
உன் இலட்சியத்தை
அலட்சியப்படுத்தும்.
இவர்களும். உன்னைப்போல்
சித்திரமாய் நிற்பதைத்தான்
விரும்பியிருக்கின்றார்களோ?

மனிதரை இழந்த
பூமியைப்போல்
வெறுமை படர்ந்த
நெஞ்சத்தில்
இடியெனக்கேட்கும்
செய்திகள்..........

வார்த்தைகளை
சூடாக்குகின்றன.
எம்மை சமாளிக்கின்றோம்
வீதியில் எங்கும்
சப்பாத்துக்கால்கள்
மூன்று மைகளுக்குள்
தன் கால்களை
முடமாகிக் கொண்ட
என் தேசத்துப் பிறவிகள்.
கூடுகள் குலைக்கப்பட்ட
இளம் குஞ்சுகள்......
இந்த நிகழ்வுகளில்
என்னை
திடப்படுத்திக்கொண்டேன்.

நீண்ட பயணத்தில்
என் மண்ணின் மணத்தை
நுகர்ந்தேன்
எதிர்காலத்தை நோக்கிய
ஒவ்வொரு நகர்வுகளிலும்
நிரந்தர மகிழ்ச்சிக்காய்
எழுகின்றேன்.

இத்துப்போன
இன உறவுகளால்
சகோதரத்துவமும்,
மனித நேயமும்
மறுக்கப்பட்டபோது.
விடிவுக்காய்
பூப்பறிக்க
வெளிக்கிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்
இனிய தோழனே!
இப்போது நீ
எதைத்
தேடிக்கொண்டிருக்கிறாய்?
எதிர்காலத்தை
தொலைத்துவிட்டு
உன்போல் பலரும்
இப்படித்தான்
வீதியிலும்
வீசப்பட்டிருக்கின்றார்கள்
ஒரு பரம்பரையின்
வீர விழுமியங்கள்
நகைப்புக்கிடமானது.
நமது குறைபாடுதான்.
விடிவுக்கு பூப்பறிக்க
புறப்பட்ட நாம்
உடன்பிறப்புக்குமல்லவா
குழிபறித்தோம்.

ஓ ஜாதிப்பூக்களே
நீங்கள்
முட்களாக மாறி
புயல் முகத்தை
சீற்றத்துடனும்
சினத்துடனும்
கீறி நிமிருங்கள்.
நாளை
மண் முகத்தை
தடவிப்பார்ப்பவர்களுக்கு
அவை
வாட்களாகவும்
வேல்களாகவும்
மாறும்.

தோழனே!
இது போராட்டத்தின்
முடிவல்ல.
சிந்திப்பதற்கு
உனக்குக் கிடைத்த நேரம்.
நீ கடலில் குதித்தது
நீச்சல் பழகவல்ல தோழா!
முத்தை எடுப்பதற்காக.
இலக்கை மறந்த
சிலரின்
எண்ணக்குறைபாடுகளால்
சீதாதேவியைப்போல்,
சுதந்திர தேவியும்
புனிதத்தை பூமிக்குணர்த்த.

பாதைகள் கோணல் என்பதால்
பயணத்தை நிறுத்துவதோ?
மூச்சுவிட முடியாமல்
முன்னும் பின்னும்
சன்னங்கள் துரத்தியபோது
புரட்சியைப் போதித்தார்கள்
இன்று
புணர்ச்சியை நாடியபோது
ஜென்னியையும்,
ஸ்குருப்ஸ்கயாவையும்,
நமக்குள் தேடுகின்றார்கள்.
இது துரோகத்தனமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை
நீ விரும்புவது
துறவித்தனமா?
தோழனே
இது போராட்டத்தின் முடிவல்ல
புரட்சியாளனுக்கு

ஏற்பட்ட விஷப்பரீட்சை.
வார்த்தைக்கும்.
வாழ்க்கையும்
காலம் பதில் சொல்லும்.
மரணித்த தோழர்களின்
உருவங்கள் மறையுமுன்னே
காதலியின் உருவத்தை
கனவில் எதிர்பார்க்கும்
கடிதங்களும் நம்மில்
குறைவோ?
சம்பவங்களை சந்திக்கும்
போது
உன் சந்தேகங்களுக்கு
தணிக்கை கொடு.

புதுக்கனவுகளுக்கு
தாழ்ப்பாள் திறந்திருக்கிறது.
விரக்திக்கு வேலிபோட
மறுப்பாயானாலும்
மக்களை மறந்துபோய்விட்டாய்.
இது போராட்டத்தின் முடிவல்ல
புதிய மலர்ச்சிக்கான உதயம்.

கண்ணடிப்பையும்,
கையிணைப்பையும்
கருத்திலெடுக்காதே.
கருத்தைக்கொடுப்பதும்
கருவைக்கொடுப்பதும்
புதிய ஒன்றை
உருவாக்கத்தான்.
இது போராட்டத்தின் முடிவல்ல
சிந்திப்பதற்கு
உனக்குக் கிடைத்த நேரம்.

என்தேசம்
பாட்டாளியின் வயிற்றைப்போல்
சுருங்கிவிட்டது.
என்தேசியம்
சோவனிசப் பாம்பின் வாய்
தேரையாய் மெல்லமெல்ல
செத்துக்கொண்டிருக்கிறது.
ஆக்கிரமிப்புக் காலனியின்
கீழ்.....
சேற்றின் மணத்தை
தென்றலுக்கு தூது அனுப்பி
அல்லி மலர்ந்து
அம்புலிக்கு கண்சிமிட்டும்
அம்பாறைக்கழனிகளும்
மாவலிக்கரங்களினால்
மரகதப் போர்வைசெய்த
திருமலைப் பூமியில்
வெள்ளையரை விரட்டி
அந்நியனைப்புறம் கண்ட
வன்னியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம் நிறைந்த சோலைகளும்.
சுருங்கிவிட்டது
சிங்களம்
பௌத்தம்
விகாரைகள்
வாழுடைய சிங்கம்
என் மக்களுக்கு
அச்சத்தை ஊட்டுகிறது.
எனக்குப் புரியாத
எவற்றையும் வெறுக்கின்றேன்.
என் தேசத்து மக்களும்
அப்படியே.
என் தேசம் சுருங்குவதையோ,
பாட்டாளியின் வயிறு
சுருங்குவதையோ
நான் எப்படி
பொறுத்துக் கொள்ளமுடியும்?

15.8.1987

## நெல்சன் மண்டேலா

கறுப்புத் தோழனே!
உன் வீரம்
விலை மதிக்க முடியாதது.
உன் நாட்டில் விளையும்
தங்கத்தைப்போல்
வைரத்தைப்போல்
உன் வீரமும்
உறுதியானவை.
மதிக்கத்தக்கவை
இருப்பத்தைந்து வருடங்கள்.
வெள்ளை வெறியின்
இருட்டுக்கரங்களுக்குள்
பூத்துக் கிடக்கும்
கறுப்பு மலர் நீ.
உன்னை மதிக்கின்றேன்.
வீரத்தை விற்ற
விடுதலைக்கு நாள்பார்க்கும்
என் தேசத்து
தலை(வர்) விதிபோல்
நீயில்லை.
அதனுல்தான்
உனது மனம்
தரையினைக்கடந்தும்.
கடலில் நடந்தும்
தோழமை நெஞ்சங்களை
தொட்டு நிற்கிறத.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்கனவுகளைக்
கருக்கொண்ட
அணுப்பொறிகள்
ஆபிரிக்கப் பூமியெங்கும்
விதைக்கப்பட்டிருப்பதை
நானறிவேன்
எம்மண்ணிலும்
உன்கால்கள் பதியட்டும்.
21.9.1987



**புதிய தீர்ப்பு**

கண்ணகி
கற்பிழந்து விட்டாள்
இளங்கோவிடம் சொல்லுங்கள்
சீதை
தீக்குளிக்க அஞ்சுகின்றாள்
கம்பனைக் கூப்பிடுங்கள்.
கோவலனும்
இராமனும்
ஏமாற்றச் சூரியனால்
எரிக்கப்பட்டு
முகம் இழந்துள்ளார்கள்.
சிலப்பதிகாரத்தையும்
இராமாயணத்தையும்
திருத்தச்சொல்லுங்கள்.
புதிய சீதையும்,
கண்ணகியும்
புனிதத்தைப் பூமிக்கு
உணர்த்த வருவார்கள்.
ஆகவே
தீர்ப்பை நிறுத்தி வையுங்கள்,
கம்பனும்
இளங்கோவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்டப்படுகின்றார்கள்.
புதிய முகங்களையும்
புதிய சிந்தனைகளையும்
உங்களிடம் கொடுப்பதற்காக.

கறுப்புச் சூரியனின்
உழைப்பின்
வியர்வையால்தான்
உங்கள் வீட்டுச்சுவருக்கு
வெள்ளையடிக்கப்பட்டிருக்கிறது.
இதயத்தைபோல்
மனிதத்தையும்
தொலைத்தபோதே
உங்கள்
வெள்ளை உடலின் நாற்றம்
உலகின் மூக்குத்துவாரங்களை
கூச வைத்தது
அழுகிப்போன
அப்பிள்ளைப்போல்
உங்கள் பெருமை
நிச்சயம் வீசப்படும்.
வெள்ளரிப்பழம் போல்
வீற்றிருக்கும் உங்கள்
எண்ணக்கட்டில்கள்
கருங்குளவிக் கூட்டங்களால்
சிதைக்கப்படும்.
ஆபிரிக்க வானமெங்கும்
கருங்குளவிகள்
சுதந்திரகீதம் இசைக்கும்.
வெள்ளைச் சூரியனின்
ஒளி மறைவிடம் தேடும்.

கறுப்புச் சூரியர்கள்
வயல் வரப்புகளிலும்....
ஆலைகளிலும்........
சுரங்கங்களிலிருந்தும்
புறப்பட்டு வருவார்கள்.
25.9.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைந்த நாட்கள்

**தாய் மனம்**

மூன்று இரவுகளை
வழி அனுப்பிவிட்டு
விழியை
வழியில் மேயவிட்ட
அவளின் கண்கள்
இமைக் கட்டிற்குள்
அடைவைக்கப்பட்டுக் கிடந்தது.

இளமை விடியலில்
பனித்துளி கவ்விய
சூரியக்கதிர்களால்
ராகத்தை
புசித்த வானம்பாடிகளின்
சிறகுகள் சிதைக்கப்பட்டதை
அவள் நினைவுகள்
மின் சாரத்தைத் தொட்டுப்
பார்க்கும்

ஒவ்வொரு மூளையிலும்
காவிவரும்
காற்றின்
செய்தி வாசிப்புக்களால்
இதயத்தில்
ஈரத்தைத் தேடிப்பார்ப்பாள்.
விழியைக் கூர்மையாக்கி
பார்வைக்கொடியை
படரவிட்டுக் காத்திருப்பாள்.
மூன்று நாட்களுக்கு முன்
பறந்த தன்வானம் பாடி
இன்னும் வீடுதிரும்பவில்லை.


இரவுப் போர்வைக்குள்
பூமி........
தன்னை முற்றாக
முடக்கிக் கொண்டது
பால் வெளிச்சோலை
நீண்டு கிடந்தது.
நட்சத்திரங்கள் எட்டிப்பார்த்து
அபாய சமிக்கையை
அனுப்பிக்கொண்டிருந்தது.
பூமிப் பேதையோ
இருட்டை இன்னும்
இறுக்கப்பற்றிக்கொண்டிருந்தாள்.

கறுத்த இரவின்
கணக்குப் பரிசோதகன்
இரண்டு மணிக்கு
எழுது கோலைப்பதித்தான்.
குருவிகள் தூங்கும்
காடுகள் நிறைந்த
அகதிச் சோலை அது
ஒன்றுமேயறியாது உறங்கி
உறங்கிப்போன
உன் தேசத்தின்
ஜீவ நாற்றுகள்

இதுவரை
இரவைதழுவிய
தென்றல் காற்று
திடீரெனப் புயலானது
நிசப்தத்தைக்
கிழித்துக்கொண்டு
ஒரு பூகம்பத்தின் அதிர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெரியவெளித்
தென்னைமரங்கள்
தலைவிரித்தாடியது
மணச்சோலை மாமரங்கள்
பிஞ்சுகளை நிலத்தில்
பீச்சியது.

மேகப்பற்றைக்குள்
நிலா மறைவிடம் தேடி
ஓடிக்கொண்டிருந்தது
காற்றுடன் கைகோர்த்துச்
செல்லும்
மரண ஓலத்தின்
அழுகுரல்
அன்டைக்கிராமத்து
இதயங்களில்
ஈரத்தைத்
தேடிப்பார்த்தது.

30.9.1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா பதிப்பகத்தின் வெளியீடுகள்

01. அம்மா கவிதைகள் கவிதை - 'திருமலை சுந்தா'
02. ஐம்பாலைம்பது கவிதை - 'தாமரைத்தீவான்'
03. வள்ளுவர் அந்தாதி - கவிதை-'தாமரைத்தீவான்'
04. சிறு விருந்து - கவிதை 'தாமரைத்தீவான்'
05. நாளையைத் தேடும் மனிதர்கள் : சிறுகதைத் தொகுதி- 'திருமலைசுந்தா'
06. சடங்கு: கட்டுரை 'திருமலை சுந்தா'
07. நான்....அவள் : (குறுங்கதைகள்) திருமலைசுந்தா
08. மெய்வல்லுனர்: விளையாட்டு பயிற்சி 'கோட்பாடு விளையாட்டுத்துறை கட்டுரைகள் : ச. விஜயநீதன்
09. 'சிவரூபபேதங்கள'- ஆன்மீக கட்டுரைகள் சிவஸ்ரீ விக்கினேஸ்வரக் குருக்கள்
10. மானுடம்: 2009 சிற்றிதழ்களின் தொகுப்பு- 'திருமலை சுந்தா'
11. சிவனொளி -2009 சிற்றிதழ்களின் தொகுப்பு-திருமலை சுந்தா
12. சிட்டு - கவிதைத் தொகுதி - கவிஞர் தாமரைத் தீவான்
13. வில்லுப்பாட்டு: கவிதைத் தொகுதி கவிஞர் தாமரைத் தீவான்
14. பாதை மாறிய பயணங்கள் : சிறுகதைத் தொகுப்பு திருமலை இ.மதன்
15. பிரபஞ்சம்: கவிதைத் தொகுதி கணேசபிள்ளை சுமன்
16. பள்ளிச்சட்டையும் புத்தகபையும் சிறுகதைத் தொகுப்பு நிலா தமிழின் தாசன்
17. போராடப்பிறந்தவர்கள் : நாவல் திருமலை சுந்தா
18. தொலைந்த நாட்கள் : கவிதைத் தொகுப்பு திருமலை சுந்தா
19 ஊன்றிய விழுது : கவிதைத் தொகுப்பு கணேசபிள்ளை சுமன்
20. பெண் அகத் தீ - நாவல் - திருமலை சுந்தா (அச்சில்)
21. வைகாசி - 29 கவிதைகள் - நிலாவெளியூர். கெஜ.தர்மா
22. ஒரு நிருபரின் களப்பதிவுகள் - செய்தி கட்டுரைகள் - சின்னையா குருநாதன்
23.ஊழிக்காலப்பறவை - அன்புவழியூர் ச. திருச்செந்தூரன் ஊழிக்காலப்பறவை - வாழ்வியல் கட்டுரைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீண்ட பயணத்தில்
என் மண்ணின் மணத்தை
நுகர்ந்தேன்
எதிர் காலத்தை நோக்கிய
ஒவ்வொரு நகர்வுகளிலும்
நிரந்தர மகிழ்ச்சிக்காய்
எழுகின்றேன்.

ISBN 978-955-41129-0-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org